# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

<u>ஆணை நாள் 04.07.2025</u>

<u>**முன்னிலை**</u>

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 10455/B/2022</u>**

திரு.ச.கோல்டன் ஜான் ஜெபக்குமார் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மண்டல துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

<u>**இறுதி ஆணை**</u>

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் 31.01.2025 அன்று காணொலி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர் தகவல் வழங்கி அது குறித்த அறிக்கையை இவ்வாணையத்திற்கு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்தில் 24.04.2025 அன்று நடைபெறவிருக்கும் இவ்வாணையத்தின் முகாம் விசாரணையில் முற்பகல் 11.00 மணிக்கு நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது.

2. மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவுபடி, திருமதி.ப.பாக்கியலெட்சுமி, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர், திருச்செந்தூர் அவர்கள் 24.04.2025 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற இவ்வாணையத்தின் முகாம் விசாரணையில் ஆஜராகி, 23.04.2025 தேதியிட்ட அறிக்கையை சமர்ப்பித்ததனை பரிசீலனை செய்கையில், மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவின்படி, 17.04.2025 நாளிட்ட விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டு மனுதாரர் திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 21.04.2025 அன்று ஆஜரானார் என்றும், மனுதாரருக்கு அவ்வலுவலகத்தில் உள்ள செம்மறிக்குளம் கிராமம் பட்டா மாறுதல் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் காண்பிக்கப்பட்டது என்றும், ஆனால், மனுதாரர் மேற்படி ஆவணங்களை ஏற்கனவே தன்னிடம் இருப்பதாக தெரிவித்து புகைப்படம் எடுப்பதற்கு மறுத்து விட்டார் என்றும், மேலும், மனுதாரர் தனது தாயார் விஜயசாந்தி பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டதற்கான SRPT 1386/9596, நாள்:01.02.1996, SRPT 2764/96 நாள்:30.01.1997, SRPT 2762/96 நாள்:30.01.1997 மற்றும் SRPT 2763/96 நாள்:30.01.1997 ஆகிய கோப்புகளை கோரியுள்ளார் என்றும், மேற்படி கோப்புகள் காலவரையறை முடிவுற்றதால் அழிக்கப்பட்டுவிட்டது என்றும், 1999 முதல் உள்ள கோப்புகள் மட்டுமே பதிவறையில் பராமரிப்பில் உள்ளது என்றும் பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளதை அறியமுடிகிறது. மனுதாரரின் தாயாரை விசாராரித்து, அதன் அடிப்படையில் மனுதாரருக்கு

தகவல் வழங்கிட இவ்வாணையத்தால் பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதனை பொதுத் தகவல் அலுவலர் ஏற்றுக்கொண்டு, மனுதாரரின் தாயாரை விசாரணைக்கு அழைத்து மேல் நடவடிக்கை எடுத்து அதன் அறிக்கையை ஆணையத்திற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார்.

3. மேற்படி பொதுத் தகவல் அலுவலர் உறுதியளித்தவாறு, 09.05.2025 தேதியிட்ட தனது அறிக்கையை ஆணையத்திற்கு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பித்துள்ளார். அதனை பரிசீலனை செய்கையில், மேற்படி ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மனுதாரர் மற்றும் மனுதாரரின் தாயார் திருமதி.விஜயசாந்தி ஆகியோருக்கு 06.05.2025 தேதியிட்ட கடிதம் மூலம் விசாரணை அறிவிப்பு அனுப்பப்பட்டு, திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலக பராமரிப்பில் உள்ள செம்மறிக்குளம் கிராமம் பட்டா எண்.1295ல் பட்டா மாறுதல் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மனுதாரரது பார்வைக்கு வைக்கப்பட்டது என்றும், மனுதாரர் கோரிக்கையினை நிவர்த்தி செய்யும் வகையில் பட்டா எண்.1295-யை மறுபரிசீலனை செய்ததில் செம்மறிக்குளம் கிராமம், புல எண்.312/1A1B1-க்கு ராமச்சந்திரன், முத்துராமலிங்கம், விஜயசாந்தி, பிரபாகரன், மேபல் அன்பு சொரணம், சூசைஞானசெலின் அம்மாள், மல்லிகா ஆகிய ஏழு நபர்கள் பட்டாதாரர்களாக உள்ளனர் என்றும், அதில் விஜயசாந்தி பெயர் மெஞ்ஞானபுரம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.411/1996 நாள்.21.08.1996-ன்படி பட்டா எண்.1295-ல் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மேலும், மனுதாரர் தாயார் திருமதி.விஜயசாந்தி என்பவரிடமுள்ள ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு உட்பிரிவு செய்து தனிப்பட்டாவிற்கு இணையவழி மூலம் விண்ணப்பித்து பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது என்றும், அதனை மனுதாரர் மற்றும் மனுதாரரின் தாயார் ஏற்றுக்கொண்டு வாக்குமூலம் அளித்துள்ளனர் என்றும், மனுதாரர் கோரிக்கையான செம்மறிக்குளம் கிராமம், புல எண்.312/1A1B1-க்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டாவிற்கு உரிய ஆவணங்களுடன் இணையவழி மூலம் விண்ணப்பிக்கும் பட்சத்தில் தனிப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளதை அறியமுடிகிறது. இதனை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டு, மனுதாரருக்கு போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை பதிவு செய்து, **இவ்வழக்கின் விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10455/B/2022</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
மண்டல துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்செந்தூர் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

<u>**மனுதாரர்:**</u>

திரு.ச.கோல்டன் ஜான் ஜெபக்குமார்,
1/206பி, பாய்ஸ் ஸ்கூல் ரோடு,
மெய்ஞ்ஞானபுரம்,
திருச்செந்தூங் தாலுக்கா,
தூத்துக்குடி மாவட்டம் - 628 210.

Copy to: File
AK/PC